

"மலையாத்திரையில்"
நடந்த
ஸத் ஸங்கம் I
கங்கோத்ரி
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா


# “மலையாத்திரையில்”

## நடந்த



# ஸத் ஸங்கம் ! I

# கங்கோத்ரி



(1)




ஸத்தியம் பேசு. ஓம் ஸத்திய வாக்கை
தர்மம் செய்.
நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்.

"ஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்ய ரூபேண"! "யத் பாவம் தத் பவதி"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்", ஓம்!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறந்தவை இவ்வி!
ஓம் அன்பின்
வடிவான, ஆத்மானந்தக் குழந்தைகளே!
உங்கள் அனைவரையும் எம் அன்னையாகவும்! தந்தையாகவும்! குருவாகவும்! போற்றிப் பணிந்து, உங்கள் திருவடி பணிந்து, திருவடி தாஸியை! எம் சென்னி சூடிக் கொண்டு, பணிவாய் எழுதுகிறோம்.


## (1) மஸ் யாத்திரை!

1970ல் அன்பின் அழைத்துச் சென்றன். 2008ல் அவனடிய நாங்கள் அந்த ஏழையான, உதவாக்கரை, பரதேசி வைத்தியத்தை! அழைத்துச் சென்றீர்கள். ஆகவே உங்கள் அனைவரின், பெருமையை சொல்லப் போமோ???




# இது ஸ்தலயாத்திரை அல்ல
# இது மலையாத்திரை ஆகும்!!!

தீர்த்தம்! மூர்த்தி! ஸ்தலம்! என முறையோடு செல்வது, ஸ்தல யாத்திரை ஆகும்! பணியே தாமமாகவும், தாமமே பணியாகவும் அமைந்த ஸ்ரீ மஹான்களின், திவ்விய தரிஸனத்தை, நிதரிஸனமாகவே, அனைவரும், அவரவர், **நிலைக்குத்** தக்கவாறு தமக்குத்தாமே, அமைந்தது மலையாத்திரை ஆகும். ஸ்தல யாத்திரை, புண்ணியத்தை கொடுக்கும். மலையாத்திரை தர்மத்தை தந்து, பிறவாநிலைக்கு வழி வகுத்துக் கொடுக்கும். தீர்த்தங்களையும், தேவ தெய்வ தரிஸனங்களையும்விட, ஸ்ரீமஹான்களின் தரிஸனமும், அவர்கள் ஆசியுமே, மிகச் சிறந்தது என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர். காரணம்:- ஆலயங்களில் உள்ள, தேவ தெய்வங்கள், மந்த்ர சக்தியுடன், பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட **திவ்விய மூர்த்தங்கள்!** ஆகும்!



மலையில் நீங்கள் தரிசித்த, ஸ்ரீ மஹான்களோ,
**கல்லும் பனியும்!!!**
சேர்ந்து அமைந்த, காட்சியாகும். இதன்
ரகஸ்யம் என்னவென்றால்? **கருவறை**
மூர்த்தி கருங்கல் ஆகும். **உத்ஸவ**
மூர்த்தி/ஐம்பொன் (உலோகம்) ஆகும். கருங்கல்லை
அடித்து உடைத்தால், அதில் உள்ள, நாம ரூபம்
சிதைந்து, அழிந்து மறையும். ஐம்பொன்னாகிய,
உலோக மூர்த்தியை அடித்தாலும் உடைத்தாலும்
அது உடையாது! அது வளையும்! அது நெளியும்!
அது **வேறு நாமரூபம்** பெறும்.

இதைப்போல, மலையில் நீங்கள் தரிசித்த
**ஸ்ரீ பகவானும் ஸ்ரீ மஹான்களும்!** கருங்கல்லில், பனியால் மூடப்பட்ட
நிலையில், உங்கள் தீக்ஷண்ய **புத்தியினால்**
அதாவது, சாட்சியாகிய **அறிவினால்!**
வடிக்கப்பட்ட,



அனுபவத்தை கொடுத்தும், மனதை பண்படுத்தும்,
ஓர் திவ்விய காட்சி ஆகும். இதன் உண்மை
என்னவென்றால் **கல்** என்பது **மண்** ஆகும்.
**பனி** என்பது **ஜலம் & அக்கினி**யும்
இணைந்ததாகும். ஆகவே இங்கு, மண் என்ற
பீடத்தில் (பிரம்மனில் அதாவது பிரம்மத்தில்)
ஜலம் என்ற ஆவுடையில் (அறிவு சொரூபமாக)
அக்கினி என்ற, **தாம** சொரூபம் நிலைபெற்று
இருப்பதாக, பொருள் கொள்ளலாம். (பிரம்மத்தை,
தர்மத்தின், உறுதியுடன், அறிவால் உணரலாம்)
ஆகம முறைப்படி, மந்திரங்களுடன், பிராண
பிரதிஷ்டை, செய்யும் மூர்த்திகளை விட,
**உருவம்** அற்ற, கல்லில் பனியால், ஓர்
உருவகம் பெறும் கல்லில், **சுத்த**
புத்தியால் (அறிவால்) ஒரே நோக்கில் பெறும்
**சிருஷ்டியின்** (கற்பனை சொரூபம்,
சிறந்த காட்சியாகவும் அமையும்) காட்சியின்
பயனையும் தரும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

௫



உ

# கங்கோத்ரியில் நடந்த ஓர் ஸத்ஸங்கம்!!!

இடம் :- கங்கோத்ரி.

காலம் :- அதிகாலை 3 மணி.

பங்கேற்பவர்கள் :- ஸ்ரீ கண்ணன்! ஸ்ரீ சிவபெருமான்! ஸ்ரீ யோகி! ஸ்ரீ ஸித்தர்! இவர்களுடன் ஓர் வைத்தியம்!

__கண்ணன்__ :- ஹே பாபா! ஹே தூளிபாபா! திருவடி தூளிபாபா! என்ன தூக்கமா? பிரயாண களைப்பா? பாவம் பிரயாணத்தால், வெகு வெகு வெகு! களைத்து விட்டாய் போலும்? (திருவடியைத் தீண்டுகிறான்)


__வைத்தியம்__ :- (இருகரங்களாலும் தடவி, உரசிய நிலையில், கண்களை ஒற்றிய வண்ணம் குருதேவா! என ஸ்மரித்த நிலையில்) ஹே கமலநயனா! ஹே மாதவா! கேசவா! ஹே பிரபோ! (திருவடி ஸ்பரிச நமஸ்காரத்துடன்) இந்த ஏழையின் பணிவான நமஸ்காரங்களை ஏற்றுக் கொள்.

__கண்ணன்__ :- நமஸ்காரம்! இருக்கட்டும். பிரயாணத்தில், ரொம்ப களைத்து விட்டாயா?

__வைத்தியம்__ :- களைப்பா? யாருக்கு?

__கண்ணன்__ :- ஓ ஓ ஓ! நீயோ, உடலின் உடைமையற்றவராயிற்றே? உன்கேள் விசாரியானதே? இந்த கேள்வி தேவையில்லை தான். இருந்தாலும் இது உங்கள் -

(6)



ஜீவ பக்த வழக்கமாயிற்றே என்று தான் அவ்வாறு கேட்டோம். (ஒரு ஸித்தரும் உடன் வந்திருந்தார்) ஸாது பாபா என்ற ஸித்தரை, ஸித்தர் என்றே அழைப்போம்:-

ஸித்தர்:- ஏன் தாஸி பாபா! உடலுடன் சஞ்சாரம் செய்யும் போது, எப்படி உடலை மறக்க முடியும்? உன் உடலுக்கு, தேவையான, உணவு ஏற்றுக்கொள்ளப்படுகிறதே. அப்படியானால், உடல் உணர்ச்சிகள் எவ்வாறு அழிய முடியும்?

வைத்தியம்:- ஹே ஸாது மஹாத்மா! உங்கள் நிலையில், அது பொருந்தும். காரணம், உங்களிடம் நான்! எனது! என்ற, அஹங்காரமும் அதிகாரமும் அழியவில்லை. ஆனால் உடைமை பாராட்டும், அபிமானம் மட்டும், அழிந்து விட்டது. அபிமானம் அழிந்து, ஒழிந்த தன்மையினால், உம் ஆத்ம சக்தி! ஸித்தாகமமாகி, உம்மை ஆட்படுத்திக் கொண்டது. இங்கு இந்த ஏழையிடம், அஹங்காரமும்! அதிகாரமும்! அபிமானமும்! எம்பெருமான் கருணையினால், அழிந்து நாசம் ஆன தன்மையினால், ஆத்ம சக்தி! ஸித்தாகமாருமல், ஆத்மாவாக ப்ரகாசிக்கிறது. ஆகவே



நான் என இருந்தால் (7)
நம் வினை, நம்மையே
சாரும். நாம் என
இருந்தால், அவ்வினை
ஸ்ரீ பகவானையே சாரும்.
ஸ்ரீ பகவான் மாயாவாக
இருப்பதால், அவ்வினை
ஸ்ரீ பகவானையும் சார
முடியாமல் பஸ்பமாகிவிடும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.


**உடல்** உணர்ச்சிகள், ஒழிந்து நாசமாகிவிட்டது. இதைத்தான், ஸ்ரீ மஹான்கள் சொல்லும் போது, "செத்தாரைப் போல் திரிவான் **சகஜ ஞானி**" எந்த பயிற்சியும், முயற்சியும் அற்றவன் என்றார்கள்.

ஸித்தர்:— இந்நிலை, ஸ்ரீ பரமேஸ்வரனின், வரத்தால் பெறுவதா? அல்லது உம் சாமர்த்தியத்தால் பெறுவதா?

வைத்தியம்:— ஹே மஹாத்மா! பரமேஸ்வரனே! **நாமாக** இருக்கும் போது, எந்த பரமேஸ்வரனிடம், வரம் பெற முடியும்?

ஸித்தர்:— இங்கு உன்னிடமே, **நான்!** இருக்கிறதே?

வைத்தியம்:— இங்கு இருப்பது **நான்** அல்ல! **நாம்!** நான் தனிமை! நாம் பன்மை! நானில் கர்த்தத்துவத்தை, நாமே வலிய ஏற்கிறோம்! நாமில், கர்த்தத்துவத்தை, ஸ்ரீ பரமேஸ்வரனிடம், நிர்லேபமாக



விட்டதோடல்லாமல், **அவரோடு நம்மையும்!** இணைத்து கலந்து, கரைந்து விடுகிறோம். அங்கு அறியாமையின், **ஜீவ** தன்மை, அழிந்து நாசமான தன்மையினால், அங்கு அவனாகிய, **அதுவே** இருக்க முடியும். ஆகவே அங்கு, பிரமமும் தேவையில்லை. சக்தியின் ஸித்திகளும் தேவை இல்லை. இங்கு **பிரம்மானந்தம்** ஒன்றே ஸத்தியம்.

கண்ணன்:— ஹேபாபா! வா! வெளியே போகலாம். அங்கு உங்கள், ஸத் ஸங்கம் நடைபெறலாம். (அங்கு ஸ்ரீ சிவபெருமான் பிரத்தியக்ஷமானார்)

பெருமான்:— குழந்தாய் நாஸி பாபா! உங்களுடன் யாமும், கலந்து கொள்ளலாமா? ஸத் ஸங்கம் என்றால், எமக்கு ரொம்ப ரொம்ப பிடிக்கும். ஹே மைந்தனரே! (கண்ணனைப் பார்த்து) யாமும், உங்களுடன் கலந்து கொள்வதில், ஆட்சேபனை இல்லையே?

கண்ணன்:— ஹர ஹர மஹா தேவா! நீரணிஜடைவா! நீலகண்டா! சாம்பவா! சங்கரா! இந்த இடம் உமது இடம்! இம்மலை உமது மலை! யாம் சொன்னதும்,



நாமரூப ஜகஜீவ தோற்றங்களை அறியாமல், அவன் ஒருவனை ஸத்தியம் என உணர்ந்தால் போதும். நாமரூப ஜகஜீவ மயக்கம், அடியோடு நாசமாகும். அங்கு அவன் பிரத்தியக்ஷமாவான். (9)

சொல்லாவிட்டாலும்! அழைத்தாலும், அழைக்காவிட்டாலும்! இங்கு நீர் இல்லாத இடம் ஏது? அவஸியம் வரலாம்.


பெருமான்:- ஹே கபட நாடக ஸூத்திரதாரியே! இந்த அறியா குழந்தை, பாபாவிடம், வசமாக மாட்டிக் கொண்டாய் போலும்? நீ அவனைப் பற்றினையா? அவன் உன்னைப் பற்றினனோ? இது வெகு வெகு, ஆச்சரியமாக இருக்கிறது.

கண்ணன்:- எம் பெருமானே! அவன் எம்மைப் பற்றவும் இல்லை. யாம் அவனைப் பற்றவும் இல்லை. உம் ஸத்திய வாக்குப்படியே அவனை, தாங்களே **அறியாப் பிள்ளை** என்று, கூறிய ஒன்றே போதும். அந்த ஒன்றே ஸத்தியம்.

(A) ஒருவன் **ஒன்றும்** அறியாமல் இருக்க வேண்டும்.

(B) அவன் **ஒருவனை** மட்டும் உணர்ந்து இருக்க வேண்டும்.

(C) அந்த ஒருவனை மட்டும், ஸத்தியமாக உணர்ந்த நிலையில், **நான்/என்னை/எனது**



ஆகிய இம் மூன்றும் (அஹங்காரம்/ அதிகாரம்/ அபிமானம்!) முழுமையாக அழிந்து, நாசமாகி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட, **ஒருவனே யாம்/யாமே அவன்!!**

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!! இது தாங்கள் அறிந்தது தானே! மேலும் இந்த பாபா! நம்மிலும் அதீதமானவன். இதுவும் தாங்கள் அறிவீர்களே!

இப்படி பேசிக் கொண்டே, சற்று தூரம் நடந்து, வந்து, ஓர் மாவத்தின் சுவரில், நாங்கள் ஐவரும் (கண்ணன்/ சிவபெருமான்/ ஸித்தர்/ யோகி/ வைத்தியன்) அமர்ந்து விட்டோம்.

(உடன் வந்த யோகியின் நாமா **மாண்டவ்யர்** ஆகும். அவரை யோகி என்றே அழைப்போம்)

யோகி:- ஹே பாபா! சற்றுமுன், நம் ஸித்தர் வசம், கூறிய வாசகத்தில், பரமேஸ்வரனே, நாமாக இருக்கிறோம் என கூறினீர்களே, இதை ஸித்தர் தானாலும் யோகிகளானாலும் உணர முடியவில்லையே, காரணமென்ன? ஸித்தர்களுக்கும்/ யோகிகளுக்கும்/ அஹங்கார/ அதிகார/ **மயக்கம்** இருப்பதாக,



ஸ்ரீபரமேஸ்வரன் (11)
ஸ்ரீ பரந்தாமன்
ஆகிய இவ்விருவரின்
வாக்கு:— குழந்தாய்
பாபா! பிரம்ம ரிஷி
பட்டமானது, பிரம்
மத்தை உணர்ந்து
அனுபவம் பெற்ற, ஓர்
பிரம்ம ஞானியால் தான்

**ஸ்ரேஷ்டஸ்தான்!** தொடரும்

கூறுகிறீர்கள். அதை யாம் ஒப்புக் கொள்கிறோம். எங்களுக்கும், அந்த **ஸ்ரீ பரமாத்மபுத்தி** தோன்றாமல், அஹங்கார! அதிகார! ஆதிக்கமான! **புத்தி** தோன்ற, காரணமானது எது? உம்மைப் போல் **பணிய!** முடியவில்லையே, காரணம் என்ன!

பெருமான்:— குழந்தாய்! பாபா! இது நல்ல கேள்வியே. பெரும்பாலும் இம்மையில், யோகிகளும்! ஸித்தர்களும்! சர்வ சக்திமான்களுமே! **98/100** பேர் இருக்கிறார்கள். மிகச் சிலரே, ஆத்ம ஞானியாக இருக்கிறார்கள். அறிவும் வாய் ஞானம் தான், இருக்கிறதே தவிர, அனுபவ ஞானம் பெற்றவர்கள், மிகமிக குறைவு தான். அதன் காரணம் **பணிவு!** இல்லாததே யாகும். இந்த யோகிகளுக்கும் ஸித்தர்களுக்கும், பணிவு இல்லாத காரணம் என்ன? இதை விளக்கவே, உன்னை இங்கு, திட்டம் போட்டு தருவித்தோம்.

வைத்தியம்:— ஹே திரிநேத்ரதாரி! திகம்பரேஸா! சிதம்பரேஸா! மஹாதேவா! இந்த விளையாட்டேன்? இந்த நாடகம் ஏன்? தாங்கள் அறியாததா? தாங்களே விளக்கம் கொடுக்கலாமே? இந்த ஏழையை, இப்படி



விஸ்வாமித்திரருக்கு (12) அப்பட்டம் கொடுக்க முடியுமே தவிர, ஏனையோரால் கொடுக்க முடியாது என்பது எப்படி ஸத்தியமோ, அதே போல் ஆத்மஞானத்தையும் யோகத்தையும் ஸித்திகளின் தன்மையையும்! ஏந்நாடரும். பரீக்ஷிக்கவாமா? ஹே கமலநயனா! கருமேக வண்ணா! சூர்ய்திரகத்தின் அவதாரியே! இக்கேள்வியின் பதில் நீ கூறுவாயா. எம்பெருமான் கூறுவாய். இவ்வேளையை, பரீக்ஷிக்க வேண்டாம் ப்ரபோ!

கண்ணன்:— மிகமிக பொருத்தமான கேள்வியே! அது பொருத்தமானவரிடமே, கேட்கப்படுகிறது.

வைத்தியம்:— கேள்வி பொருத்தமானதே! அதன் பதில் கூறுபவர், பொருத்தமானவரை இல்லையே, என் செய்வோம்?

பெருமான்:— ஹே திருவடி! ஹே குழந்தையபாமா! இங்கு! இந்த நேரம்! இந்த இடம்! ஓர் மஹத்தான சபையாக மாறி விட்டது. இப்படி கூறிக் கொண்டிருக்கும் போதே, அம்பரவியிலிருந்து அனேக ப்ரம்மஹ்ஞானிகள், இறங்கி வந்து, சூழ்ந்து விட்டனர். அவர்கள் தூலவடிவமும் உண்டு! சூட்சுமமும் உண்டு! இக்கேள்வியின் பதில், ஒருவரும் சொல்ல இயலவில்லை. இங்கு எல்லோரும், இக்கேள்வியையே திரும்ப திரும்ப! ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்கின்றனர். ஒருவர் பதிலாவது, திருப்தியாக இல்லை. நாங்கள் இருவரும் பரமேஸ்வர ஜம்புபரமாத்மாவும் ஓர் முடிவு எடுத்தோம். உன்னையும், உன் அன்பர்களையும், இங்கு தருவித்தோம்.



(13)

அதை ஆரணமாக உணர்ந்தவன் ஒருவனே, உரைக்க முடியும். நீயோர் நாவறிவினால் படித்ததை மட்டும் விரிவாக்கவும்! விளக்கவாக்கவும்! கொடுக்க முடியும்! அது அனுபவமாகாது! என்பதே அவர்கள் வாக்கியம் முடிந்தது.

வைத்தியம்:— ஹேபரமேஸ்வரா! ஹேபத்மநாபா! உங்கள் விளையாட்டுக்கு, ஓர் அளவே இல்லையா? வைராக்யம் உரைத்தவன் நீ!!! கீதாசாரம் ,, நீ!!! உங்களிடம், பாடம் கேட்பவர்கள் தான், நாங்கள் அனைவரும். இதுவே ஸத்யமாக இருந்த, இந்த நாடகம் தேவையா? உங்களில் ஒருவரே இதற்கு விளக்கம், கொடுக்க வேணுமென்று, இங்குள்ள எல்லா, ஸ்ரீ மஹாத்மாக்கள் சார்பிலும், பணிந்து வேண்டுகிறோம்?

பெருமாள்:— ஹே திருவடி பாபா! இங்கு உள் பணணணணணணணணணணணணவே இங்கு, அனைவர்க்கும் பாடம் ஆகும். மேலும் ஓர் உண்மை என்னவென்றால்? இங்கு நாங்கள் இருவரும் தேவதைம்பங்களே ஆகும் ஸத்குரு அல்ல! ஸத்குரு நீ ஒருவனே ஆகும். எங்கள் அனைவர்க்கும், இந்த கங்கோத்ரியின் கரையில் பொங்கிவரும் கங்கையாள், பிரவாகமென கருணைமழை பொழிவாயாக. அதற்கு எங்கள் ஆசிகள் உரித்தாகுக.



மேலும் அவ்விருவரும் கூறும் போது! நாங்கள் கூறுவதை விட, (14) உன் வார்த்தை ஸத்தியும் ஸத்தியமும்! நிறைந்ததாகும். ஓர் ஞானியின் வாக்கு இறை வாக்கியும் அர்த்தமானதாகும்.

**கேள்வி:**— (A) பரமேஸ்வரனை **நாமே** இருக்கிறோம். இது தாங்கள் ஸத்திய வாசகம். இதில் எம் கேள்வி? ஸித்தர்களுக்கும்! யோகிகளுக்கும்/ இதை உணர முடியவில்லையே? அதன் காரணம் என்ன?

(B) ஸித்தர்களுக்கும்! யோகிகளுக்கும்! அஹங்கார அதிகார! ஆதிக்க! மயக்கம் இருக்க காரணம் என்ன?

(C) எங்களுக்கும் அந்த, ஸ்ரீபரமாத்ம சக்தி தோன்றுமே? அஹங்கார! அதிகார! ஆதிக்க! **புத்தி** தோன்ற, காரணமாக இருப்பது எது?

(D) உம்மைப் போல், எங்களால் **பணிய** முடியவில்லையே? அதன் காரணம் என்ன?

**அது** செயல்பட இயலாந்தன்மையால், **அது அகண்டாண்ட** பாவனையில் **ஏ!** இருந்து கொண்டு, தம் **ஸத்திய ஒலி** அலைகள் **மாயா** வடிவமாக, ஸ்ரீபகவானது செயல் முறையில், ஒரு **ஸ்பீக்கராக** ஒலிபெருக்குகிறது. அதையே **பேழையாக** இருந்து **பாடலைகளில்** வரைகிறது. இதுவே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!



ஸ்ரீபகவானுவாச


ஸ்ரீபகவான் நம்முடைய, (15)
கற்பனை வடிவமாக,
இருந்தாலும். அந்த
காலாதீத பரமானது நம்
மனம் எந்த வடிவில் கற்
பனை செய்தாலும், அந்த
வடிவில் தாம் கருணை
மழையென, காத்துக்
கொண்டிருப்பதால், பரமே
வருகிறதென்று, ஸத்திய
மாக உணர வேண்டும்.

பதில்:— காலாதீத அந்த **ஒன்றின்**
**ஸத்தியவாக்கு:**— ஆத்மாவின் ஆனந்த
குழந்தைகளான! **நாக பூஷண!**
**நாக நர்த்தன!** மற்றும் மஹாத்மான
**மஹாத்மாக்களே!** எல்லாம் ஆனந்தமே!
**பவ, பய, துக்கம்!** இல்லவே இல்லை!!

இனி உங்கள் கேள்விகளுக்கு பதில்:— கேள்வி?

(A) பரமேஸ்வரனாக நாமே இருக்கிறோம், என்ற ஸத்திய வாசகத்தை, ஸித்தர்களும்! யோகிகளும்! உணர முடியவில்லையே? அதன் காரணம் என்ன?

பதில்:— யோகம் என்பதே கட்டுதலாகும். கட்டுதல் என்பது **வாயுவை** மனதால் தன்வசம் படுத்துதலாகும். **பஞ்சப்பிராணன்** என்ற இந்த வாயுவை, தன்வசப்படுத்துவதே யோகம் ஆகும். இந்த பஞ்சப்பிராணனை;




ஸ்ரீமகவானே மாயா (16)
எனதுள்ளிவ்வுன்
வினைகளை அழிக்கவல்ல
உயர்ந்த உணர்வாயதே?
நாமரூப ஜக ஜீவ தோற்ற
மும் அதைப் பற்றிய மன
தையும் உன் ஸத்குரு
அவசியம் அழிப்பார். உன்
வினையை அவர் தீர்க்கும் செய்ய
முடியாது என்பது
ஸத்தியம்.

பிராணன்! அபானன்! உதானன்! சமானன்!
வியானன்! என ஐந்தாகும். இவை மூச்சுக்
காற்று! ஏப்பம் (விக்கல்)! இருமல்! தும்மல்! மலத்து
வார காற்று! என ஐந்தாகும். இதில் நாசித்
துவாரத்தில், போக்கு வரவு புரியும் காற்றே,
பிராணன் ஆகும். இப்பிராணன் முறைப்படி,
செயல் பட்டால் **பிராணயாமம்** என்ற
**யோகஸாஸனம்** மூலம் செயல் பட
டால், சாதாரண சுவாசகாற்று, பிராணன்
எனபேர் பெறும்! அப்பிராணனே, மூக்குதுவா
ரத்திலே, மேலெ ஊர்த்துவாரியாக செலுத்தப்
பட்டால், அதுவே **வாசுதேவன்** என்ற
நாமம் பெறும். அதுவே சகஸ்ராரத்தின் மேல்,
ரோமதுவாரங்களின் வழியாக, பன்னிரண்டு
அங்குலம், மேல் நோக்கி, செலுத்தப் பழகிக்
கொண்டால், அதுவே **பரவாசுதேவன்**
என்ற நாமம் பெறும்.

ஓர் குறிப்பு!

யோகஸாஸனம் என்றால், யோகப்பயிற்சி ஆகும்.
யோகாசனம் என்றால், யோக ஆஸனப்பயிற்சி ஆகும்.
மேலும் ஓர் முக்கியம், என்ன வென்றால்?



(17)

யோகம் பயிற்சி செய்து அஷ்ட ஸித்திகளும் கைவரப் பெற்றவர் ஸ்ரீபகவானை மதிக்க முடியாது. காரணம்:— ஸ்ரீபகவான் திருப்பெருமையும், அவர்களிடம் வரம் பெறுமளவும் இவர்களுக்கு ஸித்திகள் உண்டாவதால் இவர்களுக்கு ஸ்ரீபகவான் சேவை இல்லாமல் போய்விடுகிறது.

யோகாசனம் பயிற்சியில், அனுபவ முதிர்ச்சி ஆனவர்களிடமே, இப்பயிற்சி பெற வேண்டும். புஸ்தகப் படிப்பு, பயிற்சி உள்ளவர்களிடம், இப்பயிற்சி பெறலாகாது. மேலும் "யோகத்தை தொட்டவன் விட்டவன் கெட்டான்" என அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர். யோகம் அனுஷ்டிக்க யோகம் (அதிஷ்டம்) வேண்டும். பாதியில் விட்டால், அது அவனை அழித்து விடும். இப்பிராணயாமம் என்ற, யோகம் அனுஷ்டிப்பவன், வாயுவை மேலே கொண்டு செல்வது போல், அதை கீழே இறக்கவும், அவஸியம் பழகிக் கொள்ள வேண்டும். கீழே இறக்கக், கற்றுக் கொள்ள வில்லையானாலும், அது ஆபத்தே!

முன் கூறிய நிலையில், சகஸ்ராரம் வழியாக, மேலே 12 அங்குலம் செலுத்தி பரவாசு தேவன், நிலையை பெற்றனுக்கு, (ஒருவன் சரீரத்தில், பாதப் பெருவிரலிலிருந்து, உச்சந்தலை, சகஸ்ராரம் வரை ஜோதி ஆட்சி செய்வதாக, அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர்)



ஆகாயத்தைப் போல் சக்திவாய்ந்தது வாயு ஆகும். அக்கினியை விட (தேவ தெய்வ சக்தியை விட) அதிக அபார சக்தியை உடையது வாயு ஆகும். எதையும் அசைக்கும் அதி ஆற்றல் உடையது வாயு ஆகும். அந்த வாயுவின் அம்சமே யோகமும். அந்த யோக (வாயுவின்) முதிர்ச்சியே அஷ்டமாஸித்தியாகும். (18)

தேவர்களிடம் போராடியே, அவர்களை வெற்றி கொள்ள வேண்டும்! அப்படி போராடி, வெற்றி பெறும் போது, அந்த தொண்ணூற்றாறு பேரின்! **சக்திகளும்** இயல்பாகவே, இவனுக்கு கிடைத்து விடுகிறது. அந்த அபூர்வ சக்திகளே! **அஷ்டமாஸித்திகளாக** வடிவெடுக்கிறது என, அனுபவ ஸ்ரீ மஹான்கள் சொல்வதுண்டு. இப்படி பெறும், அஷ்டமாஸித்திகளும் திரிகர்த்தாக்களின் **மாயா சக்தியை** விட, அபூர்வமாகவும், அதிவல்லமையாகவும் இருக்கும் என, அந்த திரிகர்த்தாக்கள், வாயிலாக அறிகிறோம்.

இனி உன் கேள்விக்கு பதில்.

(A) திரிகர்த்தாக்களின், சக்தியை விட, இவர்கள் **ஸித்திகள்** அதிவல்லமையாக, இருப்பதையும்? (B) திரிகர்த்தாக்களின், வரமோ, சகாயமோ, இல்லாமல் இவர்கள் பெறுவதையும், **வாயுவை, கும்பகம்** செய்து நான்! அஹங்கார சுயபலத்தால் அடக்கியதால் என்றால் என, அஹங்கார அதிகாரத்தால் பெறுவதாகும்.



(19)

நானே எல்லாம் என்றால் தான் முடிந்தது என்றும், முடியும் என்றும், இறுமாப்புடன் இருக்கும் ஒரு கவனசக்தியில் ஆத்மா என்றே! பரமாத்மா என்றே! திரிகர்த்தாக்கள் (ஸ்ரீ பகவான்) என்றே எண்ணும் உமாமல் தடைசெய்வது போலாகி விட்ட கடின திரையாகும்.

மனமே ஓர் **வஜ்ரம்**

(D) **ஆத்மா! பரமாத்மா!** என்ற **நம்பிக்கையை** இழந்து **எல்லாம் நானே!** எல்லாம் **என்றால்!** தான் முடிந்தது என்றும்; முடியும் என்றும்; (E) ஓர் **திரை** இவர்களை, மூடிவிட்டதாலும்; நாமே ஆத்மா! நாமே பரமாத்மா! நாமே பரப்பிரம்மம்! என்ற **ஞான ஒளி** பிரகாசிக்காமல். நான்! என்றால்! என்ற அஞ்ஞான **இருள்** மூடிக்கொண்ட தன்மையாலும்; (F) **ஈஸ்வராதிகளின்!** தயையும்! கிருபையும்! கருணையும் (G) தேவை இல்லாமல், போனதாலும். இனியும் மேவாத மனம் **அழியாமல்!** (H) **மனோ பலத்தால்** பெறுவதனாலும்; பரமேஸ்வரனை நாமே இருக்கிறோம் என்றே! ஆத்மா! பரமாத்மாவாக! நாமே இருக்கிறோம் என்றே! **பணிவில்லா வறட்சி** இவர்களிடம் உண்டு.



இந்த யோகியிடமும் ஸித்தர்களிடமும் (20)
அஹங்கார அதிகார
ஆதிக்க, வெறி
தான் உண்டே தவிர
எந்த ஆசையும்!
எந்த அபிமானமும் இருக்க முடியாது.
அப்படிஏதேனும் இருந்தால் இவர்கள்
இருக்க இயலாது. அஷ்டமாசித்திகளும்! பெறமுடியாது! பெற இயலாது.
யோகமும்!

(B) கேள்வி:
ஸித்தர்களுக்கும்! யோகிகளுக்கும்! அஹங்கார! அதிகார! ஆதிக்க! மயக்கம் இருக்க காரணம் என்ன?

பதில்:— யோகியும்! ஸித்தனும்! காற்றை நம்புகிறான். ஆனால் கடவுள் நம்புவதில்லை.

காரணம்:— காற்று ஒன்றே அசையவும் எதையும் அசைக்கவும் முடியும். இக்காற்றை, அசையும் நிலையில் மாயா மனதை ஒன்றுக் கொண்டும், அசைக்கும் நிலையில் நாமரூப ஜகத்தை ஒன்றுக் கொண்டும். இவ்விரு நிலைகளில் வருவதே அஹங்கார! அதிகார! ஆதிக்க வெறி என மஹான்கள் சொல்வர்.

(C) கேள்வி:
எங்களுக்கு, பரமாத்மபுத்தி தோன்றுமல், அஹங்கார, அதிகார, ஆதிக்கபுத்தி! தோன்ற காரணமாக இருப்பது எது?

பதில்:— அசையும் மனமும்! அசைக்கும் காற்றும்! சேர்ந்து இணையும் போது, ஈசன் ஒருவன் உண்டு என்றும், எல்லாம் அவன் பொருள் என்றும்,




(21)

இடைகலை, பிங்கலை,
சுழிமுனை, என்று
காற்றின் சுழற்சியிலேயே
இவன் கவனம், முழுமையாக
செலுத்தப்படுவதால்,
இவன் மனம் கருணை
என்ற, ஸ்ரீ பகவான் நினைவை,
நாட மறந்து விடுகிறது.
மறந்து விடுகிறது. முடிவில் மறுத்து விடுகிறது.
தொடரும்.

எல்லாம் அவன் செயல் என்றும். எண்ணும் எண்ணத்தை மனம் மறந்து விடுகிறது என, சொல்வதைவிட, மறக்கடிக்கப்படுகிறது. காரணம் நான், என்றல், என்ற அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், வெறி ஆகும். என் சிருஷ்டி, என்றல் முடிந்தது, நானே கர்த்தா, நான் இல்லாமல், எதுவும் இல்லை, என நான், நான், நான், என மார்தட்டிக் கொண்டு, மன இருப்பின் தனிமையை, நாடிக் கொண்டு, எல்லாம் நாமே என்ற, ஐக்கியத்தை நாடாமல், பணிவு கனிவின், சுவையை விரும்பாமல், இந்த மனமானது, தான்தோன்றித்தனமாக அலைவதால், பரமாத்மமுக்தி தோன்றுவதில்லை என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.


D **கேள்வி:** உம்மைப் போல், எங்களால், பணிய முடியவில்லையே அதன் காரணம் என்ன?

**பதில்:**— பொறுமை, பணிவு, கனிவு, அன்பு, கருணை, [illegible], பிறர் குற்றம் குறைகளை மறத்தல், மன்னித்தல், விட்டுக் கொடுத்து தாம் விலகுதல், எல்லாம் நலமே என ஆரண நிறைவுடன் ஏற்றுக் கொள்ளுதல், இவைகள், அரனின் அம்சமாகும்.




காரணம்:- கடவுள் என்பது நம்முடைய (22) **கற்பனை** தானே? நான் காற்றின் வலிமையை என் மனோ பலத்தால் சாதிப்பதற்கு, இங்கு எவர் துணையும், தேவை இல்லையென, இறுமாப்புடன், பாறையென **இருக்கப்போய்விடுகிறான்!** முடிந்தது.

போட்டி! பொறாமை! வஞ்சகம்! சூழ்ச்சி! விரோதம்! துரோகம்! பெண், பொன், இவைகளை விட முடியாத ஆசை! மோஹம், போஹம், காமம், வேகம், **வெறி!** ஆக்ரோஷம்! அவசரம்! வேகம்! படபடப்பு! எதிலும் **உடனே** முடிவு காண விழைதல்! இவை அனைத்தும் **மனதின்** அம்சமாகும். இதன் உண்மை என்னவென்றால், இந்த மனம், மஹத்தானால், அதுவே அறிவாக மாறும். ஆனால் அறிவாகிய மனம், திரும்பவும் மனம் ஆகாது. மேலே கூறிய, அறிவின் **ஒரு குணம்** மட்டும் ஏற்றுக்கொண்டால் போதும். அந்த அறிவின் குணங்களும் முயற்சி இல்லாமலேயே, சாத்தியமாகி, அங்கு **அறிவு** ஒன்றே, பிரகாசிக்கும். அதேபோல், மேலே கூறிய, மனதின் ஒரு **கோர குணம்** மட்டும், உன்னை விட்டு, அகன்று விட்டால் போதும். அந்த மனதின், கோர குணங்களும் அழிந்து நாசமாகி அங்கும், **அறிவு** ஒன்றே பிரகாசிக்கும். இப்படி சாதனை செய்பவனுக்கு, இயல்பாகவே, எந்த பயிற்சியும்! முயற்சியும்! இல்லாமல் **பூரணஅறிவு** ஒன்றே சாத்தியமாகும். முயற்சி உன் வசம். அதன் பலன், அது வாகிய அவன் வசம்.



ஆனால் உங்களைப் போன்ற, யோகிகளிடமும்! ஸித்தர்
களிடமும்! எந்த ஆசாபாச அபிமானங்களும்!
**இல்லை!** ஆறையும் அடங்காத, ஆதிக்க,
அநியாய, **வக்ர குணங்கள்** அழிந்து
நாசமாகாததே, **பணிவு** வராத காரணம் ஆகும்.
பணிவு என்ற பள்ளத்தில், தான் இறை கருணை என்ற, ஜலம்
தங்கு தடையின்றி, பாய்ந்து நிறையும்.
முன் சொன்ன, வக்ர குணங்கள் என்ற **மேடான**
இடத்தில், எப்படி இறை கருணை என்ற ஜலம் பாய முடியும்!
யோகி:— ஹேபாபா! யோகத்திற்கும்! அதுவே
அஷ்ட ஸித்தியாகும் ஸாதகத்திற்கும், ஆதியோடு
அந்தமாக, நல்ல விளக்கம், கொடுத்த தாங்கள்,
மற்றும், ஏன் யோகத்தை, கடைப்பிடிக்கவில்லை?
ஆன்ம விசாரணையோடு, யோகம் செய்தால், அது
ஸித்திக்கும், கொடுப்பது இல்லை யென்பது தெளிவாகிறது.
ஆகவே தாங்கள், யோகம் செய்து கொண்டே, ஆன்ம
விசாரணை செய்திருக்கலாமே?
மைத்ரேயம்:— உண்மை தான் மஹாத்மா! உண்மை தான்.
**த்யானம்** என்ற எளிய முறை இருக்க, **கடின**
முயற்சியான,

# யோகம் ஏன்?



யோகி:— தியாகம் என்பது கடினம் இல்லையா?


வைத்தியம்:— எப்படி கடினம் எனச் சொல்கிறீர்கள்?

யோகி:— எல்லாம் நீயே! என ஓர் ஸ்ரீ பகவானிடம், விடுவது என்பது அஸாத்திய, பொறுமை வேண்டுமே?

வைத்தியம்:— உங்கள் வாயுவை, கட்டுவதற்கு (கும்பகம் செய்வதற்கு) உங்கள் மனதை வருத்தி, என்னபாடு படுத்துகிறீர்கள்?

யோகி:— ஹேபாபா! நீங்கள் மட்டும் என்னவாம்? மனதின் பொறுமை, எத்தகைய கடினம் தெரியுமா?

வைத்தியம்:— நீங்கள் கடினம் என, எதைச் சொல்கிறீர்கள்? தேவையிறல் ஆசையும்! ஆசையிறல் தேவையும் ஒருவனை ஆட்படுத்தும் போது, விரக்தியுடன் விருப்போ அல்லது வெறுப்போன் அடைந்தால், அது கடினம் தான். ஓர் ஸ்ரீ பகவன் நாம உணர்வுடன், எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எல்லாம் உன்னால்! என்ற நினைவால், நடப்பதிலும்! கேட்பதிலும்! பார்ப்பதிலும்! செய்வதிலும்! எல்லாம் நலமே எனும் பூரண நிறைவு கொள்வது, பிரம்மமும் இல்லை அங்கு சந்தேகம்,



பயம் கலக்கம் வருவது இல்லை. காரணம்
இங்கு, ஸ்ரீ பகவன் நாமா என்ற, சூட்சுமமெலி
யானது, நாமரூப சூட்சும குண
ங்கள் அழித்து நாசம் செய்து விடுவதால்,
அது கடினம் இல்லையென, பிரமாணமாக சொல்வோம்.

யோகி:- இந்த பழக்கம், இதுவரையில், எவரும்
சொன்னதாக தெரியவில்லை. வாழ்க்கையையும்,
நாமரூப பொருள்களிலும் விரக்தி
(வேண்டாம் எனத் தள்ளும் நிலை) வேண்டும் என்றுதான்
சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். போதும்
என்ற நிறைவு வேண்டும் என்பதை இப்போது
தான் கேள்விப்படுகிறோம். நாங்கள் அனைவரும்,
விரக்தி உண்டுதான், இந்நிலையைப் பெற்றோம்.

வைத்தியம்:- உங்கள் விரக்தியை, நீங்கள் பெற்ற
அனுபவம் என்ன? வறட்சி தானே?
ஈரமை (கனிவும் பணிவும்) இல்லையே?
இதையாவது உணர முடிகிறதா? அங்கு இறை உணர்
வும் இல்லையே! அதையாவது உணர முடிகிறதா?
உங்கள் விரக்தியின், சுய அனுபவம் என்ன?






# நான் சாதித்தேன்! எண்ணங்கள் முடிந்தது என்று ஒருமை இல்லாத வெறுமை தானே?

யோகி:- ஹே கருணையே வடிவான பாபாவே! இப்போது நான் உணர முடிகிறது. எளிமை! இனிமை! ஒருமை! பணிவு! கருணை! இவைகளின், முழு அர்த்தமே இன்று தான் விளங்குகிறது.

பைத்தியம்:- எம் மெய் அன்பர்களே! நான்! என்றவ! எனது! விட்ட மறுகணமே! எல்லாம் நீயே! உன்னால்! உனதே! என ஓர் நாமரூப, பகவானுடையதாகிவிடுமே. எல்லாம் நீயே! உன்னால்! உன்னுடையதே! என உறுதி நிச்சயம் ஆனால், உங்களுடைய, அஹங்கார, அதிகார ஆதிக்கம் அதிர்ந்து நாசம் ஆகுமே. அதே மறுகணமே **அவனே! நீங்களாய்! நீங்களே அவனும்!** ஆகிவிடுவீர்கள் இது சத்தியம். (அது இயங்காது. அவன் இயங்குவான்)

சித்தர்:— ஓம் ஐயனே பாபா! யோக சாதனம் செய்து வாயுவை அடக்காமல்! அதன் மூலம் மனதை கட்டுப்படுத்தாமல், எப்படி மனதை வெல்ல முடியும்? இந்த வாயு, அடங்கினால் தானே மனம் அடங்குமே?




வைத்தியம்:- ஓ மஹாத்மா! யோகத்தினால்தான் வாயு அடங்குமா? சர்வ சங்கபரித்தியாகத்தால், மனம் அடங்காதா? வாயுவும் அடங்கி ஒடுங்காதா?

ஸித்தர்:- அப்படி எவரும், வாயுவையும் மனதையும் அடக்கியதாக இது வரையில், யாம் கேள்விப்படவில்லையே.

வைத்தியம்:- ஐயா புண்ணிய புருஷரே! இந்த ஏழையின் மூக்கு நுனியில், உம் விரலை வைத்து பாரும் பார்ப்போம்?


அந்த ஸித்த புருஷர், அவ் வைத்தியத்தின், மூக்கு நுனியில் தம் விரலை, சில நிமிஷங்கள், வைத்து பார்த்து விட்டு; ஆமாம் மூச்சு காற்றைக் காணோம். சிறிதளவு, உஷ்ணம் தான், தோன்றுகிறது என ஆச்சரியம் கொண்டார்.

ஸித்தர்:- ஹே பாபாஜீ! இது எப்படி உமக்கு சாத்தியமானது? வேறு ஏதாவது சாதனை செய்கிறீரா? நாங்கள் பலகாலம் அரும்பாடுபட்டு, சுவாசத்தை, பந்தனம் (கட்டுதல்) செய்கிறோம். நீர் யோகம் பயிற்சி பண்ணாமலேயே, வேறு எந்த முயற்சியும், பண்ணாமலேயே, இச்சுவாச பந்தனம், எப்படி முடிந்தது? இது எங்கள் அனைவருக்குமே, வெகு வெகு ஆச்சரியமாக இருக்கிறது. சற்று விளக்கமாக, எங்கள் அனைவருக்கும் உரைக்கவும்?



கண்! காது! வாக்கு! (28)
இம்மூன்றையும் எவன்
தம்வசம் ஆக்குகிறானோ
அவனே அன்பின் சொரூ
பம். அவனையே ஸ்ரீபகவா
ன், தம்வசமாக்கிக்
கொண்டு தாமாக்கிக்
கொள்வான். அவன் வாக்கு
மௌனம் ஆகும் அதாவது,
இறை, குரு, பர, கருணை, வாக்காக மாறும்.

வைத்தியம்:- ஓ எம் மெய்யன்பர்களே! இங்கு
எந்த பயிற்சியும் இல்லை! முயற்சியும் இல்லை!
அடக்கிப் புலனைப் பிரித்தோம்! அவன்
(ஸ்ரீபகவான்) ஆகிய மேனியில்! அன்பை
(எல்லாம் நீயே! என்ற அனுபவத்தை) வளர்த்தோம்.
மடக்கிக் கொண்டான் எம்மைத்தான்!
சற்றும் வாய் பேசாவண்ணம், மறப்பு செய்தாண்டி.
என்ற உங்களைப் போன்ற ஓர் மெய்யன்பரின், ஸத்திய
வாசகமே, எம் அனுபவம் ஆகும்.
ஒன்றை கொடுக்காமல், ஒன்றை வாங்க முடியாது.
எம்மை கொடுத்தோம்! அவனை வாங்கிக் கொண்டோம்.
அவ்வளவுதான்.
இவ்வாறு எம்மைக் கொடுக்கும் போது! ஆசையும் & தேவையும்
போதும் என நிறைவு கொண்டன. இங்கு
ஆசை அழிந்தாலே, ஆக்கம்! அவசரம்! வேகம்! பயம்!
அழிந்து ஒழியும்! அவம் + சரம் = அவசரம். அதாவது
வீணை மூச்சு காற்று, தானாக ஒடுங்கி விடும். இதற்கு
உங்கள் முயற்சியாகிய, யோகம் தேவையில்லையே!




இங்கு உங்கள் முயற்சி, எப்படி இருக்கிறது என்றால்?
**மலையை** கிள்ளி (குடைந்து, குடைந்து, குடைந்து)
**எலியை** பிடிக்கும் கதை போல் இருக்கிறது.

ஸ்ரீகங்காதரனும் & சுதாகரனும், உட்பட எல்லா ஸ்ரீமஹாத்மாக்களும், கவ கவ கவ கவ வென சிரித்து விட்டனர். அச்சிரிப்பொலியில், பனிச்சிகரங்கள் அனைத்தும், **அதிர்ந்து, சிரித்து மகிழ்ந்தன.**

வைத்தியம்:- எம்பெருமானே, ஜடாதாரி, சந்திரசேகரா! ஓர் சிறிய விண்ணப்பம். அதைக் கேட்கலாமா?

பெருமான்:- ஏன்பாபா! இந்த தயக்கம்? உனக்காகவும் உன் **மெய்யன்பர்களுக்காகவும் தான்!** நாங்கள் அனைவரும் இத்தனைகாலம் காத்துக் கொண்டிருந்தோம், காத்துக்கொண்டும் இருக்கிறோம். நீயோ எங்கள் அனைவரிலும் அதீதமானவன். ஆனால் உன்னை நீயே மறைத்துக் கொண்டாய். நீ இன்று அழைத்து வந்த, **அந்த** அன்பர்களின் **கூட்டம்** பொறுக்கி எடுத்து, கொண்டு வந்தவர்கள் ஆவர். உங்கள்



அனைவர்க்கும் எங்கள் அன்புடைய **வரவேற்பும் & நமஸ்காரமும்!** பரிபூரணமாக உரித்தாகுக.

கேட்க வேண்டியதைக் கேள்! ஆனால் நீ பெற வேண்டியவனில்லை.

வைத்தியம்: (இவ்வார்த்தையைக் கேட்டதும், கட கட கட கட கட கட கட கட கட கட வென சிரித்துவிட்டு) எம்பிரபுவே! கேள்வியும் எம்முடையதும் அல்ல. எம் கேள்வியும் அல்ல! கொடுப்பதோ! வாங்குவதோ! போவதோ! வருவதோ! எமக்கென எதுவுமே இல்லை.


**ஆனாலும்?**

எல்லாம் **யாமே!** யாமே **எல்லாம்!!** பக்குவப்படாமலும்! பக்குவப்பட்டும்! இங்கு வந்திருக்கும் அன்பர்களும்! பிற சம்பந்தத்தால் இங்கு வர இயலாத தூரவாசம் பந்த அன்பர்களும்! (உடல்தான் அங்கு இருக்கிறதே தவிர அவர்களும் இங்கேதான் இருக்கிறார்கள்) வைத்திய வாசகத்தில் **நம்பிக்கையும் வைராக்கியமும் கொண்ட ஜீவன்முக்தர்** கருக்காத மட்டும் இதைக் கேட்கிறோம்.





1970ல் அந்த ஏழை பரதேசி வைத்தியமானது,
அவன் அருளால் அவன் தாள் வணங்கி!
என்ற நிலையில், ஸ்ரீபண்டரிபுரம் வந்து, அவன் திருவை
பெற்று, அவனாகிய எம் பிரபுவின் பரிபூரண
திருவா கடாக்ஷத்தால், அவனுடன்
சிவகாவலம், ஸ்தல யாத்திரை செய்ததாக,
எம் மெய்யன்பர்கள் நரி வடிவிலும் (ஓர்புலிகத
வாயிலாகவும்) வாக்கு வடிவிலும் (அவனுடைய
புலம்பலாகவும்) கேட்டு ஆனந்தம் அடைந்தனர்.
அன்று அது நடந்தது சாட்சி பாவனையாகும்.
ஆனால் இன்று இது இருப்பது சர்வசாட்சி
என்னும், அகண்டான்மபாவனை
ஆகும். அன்று இங்கு வந்ததோ! இருந்ததோ! அனைத்
இடங்களில், சஞ்சாரம் செய்ததோ, மனோ வடிவம் ஆகும்.
அன்று அழைத்து சென்றதோ அறிவு சொரூபம் ஆகும்.
ஹரஹர மஹாதேவா! நீரணி சடைவா! நீலகண்டா!
திரிநேத்ரா! திரிபுராந்தகா! திரிசூலா! திகம்பரேசா!
ஹே பசுபதீஸ்வரா! எம் கேள்வியாவது?



அன்று வந்ததாலும், இந்த இமயமலை என்ற கை
லாச பதியில்! வந்த விதம் என்ன?
தரிசித்த விதம் என்ன? தரிசித்த இடம் என்ன?
வெள்ளியங்கிரியின் காட்சி
யின் ரகஸியம் என்ன?

(A) சலிக்கின்ற மனதுடையவர்கள், கற்பனையெனச் சொல்லி, நம்ப மறுக்கின்றனர். (நேரிடையாக வல்ல மறைமுகமாக)

(B) அறிவுடையவர்கள், அப்படியே ஸத்தியம் என்று ஏற்று நம்பி ஆனந்தம் அடைகின்றனர். அப்படியே, நாமும் அனுபவிக்க வேணுமென்று ஏங்கித்துடிக்கின்றனர்

யத் பாவம் தத் பவதி (என்ற நிலையில் அமையும்.)

அன்று கண்டதோ! அறிவும் (குருவும்) பக்தியும் (சிஷ்யனும்) இணைந்து! அனுபவித்த நிலையாகும். ஆனால்

அன்று! உணர்வதோ! அறிவே (குருவே) பேரறிவாகி (ஸத்குருவாகி) ஸர்வஸாட்சியாய்! உணர்ந்து! உணர்த்தும் நிலையாகும்.



ஸத்குருவின் (33)

வாக்கிலும், அவர் மீதும், நம்பிக்கை இல்லாதவன், அவன் இருந்தும் இலனே ஆவான். அவன் மனிதஜன்மா எடுத்தும், சாமான்ய ஜீவனேயாவான். அவன் ஜனனமரணத்தை தாண்டவும் முடியாது. ஜீவன்முக்திநிலை பெறவும் முடியாது.

**பாமரன்:**

பணிவே பாதையான குழந்தை பாபாவே! தமிழ் நாட்டில், ஓர் கர்ணபரம்பரை **பழமொழி** உண்டு:


**"நம்பியவருக்கு நடராஜா! நம்பாதவருக்கு எமராஜா!"**

அதாவது?

சாஸ்திரமும், வேதமும், சொல்வதாவது:— **ஸ்ரீமாதா ஸ்ரீபிதா, ஸ்ரீகுரு, ஸ்ரீதெய்வம், ஈ!**

வேதாந்தம் சொல்வது:— **ஸ்ரீமாதா, ஸ்ரீபிதா, ஸ்ரீகுரு, ஸ்ரீதெய்வம், ஸ்ரீஸத்குரு, பரப்பிரம்ம சொரூபம்,** ஆகும்.

இவைகளை அப்படியே ஸத்தியம் என நம்புகிறவன் மனிதனும், பின் தெய்வமும், பின் ஜீவன்முக்தனும் ஆவான் இது ஸத்தியம். இவைகளை நம்ப மறுக்கிறவன், ஜீவன் என்ற நிலையில் தாவன் பிடியில் சிக்கி, பற்பல ஈன ஜன்மமே பெறுவான் இது ஸத்தியம். என்று, அனுபவ ஸ்ரீமஹான்கள், வாயிலாக அறிகிறோம்.



பிரவாகம் (ஓம்) என்றால் நதி புறப்பட்டு வெளியில் ஓடி **கங்கா** என நாமம் பெறுவதாகும். கோமுகம் என்றால் அந்த கங்கை பசு என்ற ஸ்ரீ அன்னையின், வாயிலிருந்து புறப்படும் இடம் ஆகும்.

**நம்புபவனை** விரும்பவும் வேண்டாம்!

**நம்பமறுப்பவனை** வெறுக்கவும் வேண்டாம்!!

இது **அவரவர் | விதி | மனம் | விருப்பு**

தான் பொறுப்பே தவிர, அவர்கள் பொறுப்பல்ல.

**அவர்கள்** நம்மவர்களே! அவர்களும் நாமே!

என ஸத்தியமாக நம்பு.


வைத்தியம்:- ஹே பரமனே! தயாநிதி! கங்கோத்ரி! என்றால் என்ன?

பரமன்:- குழந்தாய் பாபா! கங்கோத்ரி! என்றால் கங்கை **பிரவாகம்** ஆகும் இடம், என்று பொருள்படும்.

வைத்தியம்:- ஹே பிரபோ! கோமுக் என்றால் என்ன?

பரமன்:- குழந்தாய்! கோமுக் என்றால் **கோ முகம்** என பொருள்படும்.


வைத்தியம்:- கோமுகம் என்பதன், மூல அர்த்த பொருள் என்ன? அதை சற்று சுருக்கமாகவும், விளங்கும் நிலையிலும், சொன்னால் போதும்?




பரமன்:— ஏன் ஐயனே பாமா! புராணம் என்றாலே பொய் என்றும், அப் பொய் வேண்டாம் என்றும் சொல்லுவாய். ஆகவே இப் பொய்க் கதையை, எப்படி உனக்குச் சொல்வது என்று நான், சற்று திகைக்கிறேன்?

வைத்தியம்:— தேவகிதேவா! பரவாயில்லை. இது எம் குழந்தைகளுக்காகத்தானே கேட்கிறேன்? எம் குழந்தைகள் அனைவரும், இன்னமும் **கதை** கேட்கும், குழந்தைகளாகவே இருக்கிறார்கள். ஆனாலும் **கருத்தையும்** கிரஹிப்பார்கள். எம் குழந்தைகள் அனைவரும், **அறிவுள்ள** குழந்தைகளே! நீங்கள் கதையுடன் கருத்தையும் இணைத்து சொல்லுங்கள். அவர்கள், கதையைப் பற்றிக் கொண்டு கருத்தில் நிறைந்து விடுவார்கள்.

பரமன்:— உன் குழந்தைகளைப் பற்றி, எமக்கும் தெரியும். சரி சரி! கதையை கருத்துடன் இணைத்து, வெகு சுருக்கமாக சொல்லிவிடுகிறேன். கவனம் தேவை. அக்கதையாவது?



**சகரன்** என்று சொல்லக்கூடிய, ஓர் அரச வம்ச அரசகுமாரர்கள் **100** பேர் விதிவசத்தால், ஓர் தபஸ்வியின், தபாக்கினிக்கு, இரையாகி சாம்பல் ஆனார்கள். அவர்களுடைய சாம்பல், இந்த இமாலய நாடு வரையில் **1000** மைல்கள் விஸ்தீரணத்திற்கு, காற்றில் பரவி கிடந்தது. அவர்களின் பேரனான/ **பகீரதன்**/ தம் மூதாதையருடைய, ஜன்ம சாபவிமோசனத்திற்காக, கடும்தவம் இருந்து, எம்மிடம் இருந்து, ஓர் **ஜலப் பிரவாகத்தை** வேண்டினான். பல ஆயிரம் வருஷம், தவம் இருந்த அவனின், தவம்பூர்த்தியாகும் தருணம் வந்தது. எம் மைத்துனராகிய, ஸ்ரீமந் நாராயணன்/ திரிவிக்கிரமனாக, (நெடிதுயர்ந்த **விராட்** ரூபமாக) தோன்றி, விண்ணை ஓர் பாதத்தால் அளக்கும்போது, திருமால் பாதமானது, பிரம்ம லோகத்தை எட்டியது. அப்பாதத்தைக் கண்ட பிரம்மதேவன், தம் **கமண்டல**



37

கங்கையின் பிரவாகமானது, இறைவன் ஜடா மகுடத்தின் ஓர் சிறிய இடைவெளி மூலமாக வெளியேறும் போது, அது அன்னையின் முகம் மூலமாக வெளிவந்ததால் அது பசுமுகம் என்ற கோமுகம் என ஆனது. அது வெளியில் வேகமாக சீறி பிரவாகத்துடன் செல்லும் போது ஆவேச கங்கையாக ஓடும்.

இவத்தால், அத்திருமால் பாதத்தை அவர் ஸ்ரீ பாத பூஜை செய்தார். அப் **பாதத்தீர்த்த**மானது, அளவற்ற ஜலப்பிரவாகமாக, **ஆகாய கங்கை**! என பூமியை நோக்கி, விரைந்து வந்ததும், தக்க தருணத்தை, எதிர்பார்த்திருந்த யாம்! அந்த ஆகாய கங்கையை, பூமியில், நேராக விழுந்து, அவலமாக போகவிடாமல் தடுத்திட கொள்ள, எம் **ஜடாமகுடத்தை** விரித்து ஏற்றுக் கொண்டோம். அந்த ஆகாய கங்கை, எம் ஜடாமகுடத்தில் புகலிடமாகி விட்டது. இப்போது எம் பகீரதனுக்காக, அக்கங்கையை, பூமியில் அமைதியாக, இறங்கி பாயும் நிலைக்கு, எம் ஜடா மகுடத்தின், ஓர் **சிறிய** ஜடா முடியை மட்டும், விலக்கி பிரித்தெடுத்து, ஆகாய கங்கையை, வெளியேற்றினேன்.

குறிப்பு:- ஜலம் மேலேயிருந்து மழையாக பெய்யும் போது, அதை வருணன் என்ற **ஆண்மையிலும்**! அதே ஜலம் பூமியில் பிரவாகமாக ஓடும் போது மட்டும், அதை **கங்கா** என்ற **பெண்மையிலும்**! சாஸ்திரம் சொல்லும்.




(38)

அந்த பூலோக கங்கை அப்படி ஓடும் வேகத்தில், சாகரர் என்ற நூறு பேரின் அஸ்தியான சாம்பல்களை அடித்து எடுத்துச்சென்று, கடலில் கரைத்துவிட்டாள் அந்த நூறுபேரும் பகீரதனுடைய, ப்ராயச்சித்தங்களால், பாபசாப விமோசனம் பெற்று சொர்க்கம் அடைந்தனர்! என்று புராணக்கதை, சொல்கிறது. முடிந்தது.

இதை பிரித்து, திரித்து சொல்லும் போது:—

மழையாக கொட்டும் போது, ஆகாய கங்கை என்றும், அதே ஜலம், பூமியில் ஓடும் போது, பூலோக கங்கை என்றும், அதே ஜலம், கிணற்றில் ஊற்றெடுத்து, வரும் போது அதை, பாதாள கங்கை என்றும், மூன்று விதமாக சொன்னார்கள் ஸ்ரீமஹான்கள்.

இனி கதையை கேள்:— ஈச ஜடையை விட்டு, வெளியேறும் கங்கையை, ஓர் அம்பாளாக பாவனை பண்ணி, அதாவது **பசு** என்ற **பெண்** இனமாக பாவனை பண்ணி, பசு என்றால் கோமாதா என அழைப்பதுண்டு ஈச ஜடையின், இடையில் உள்ள **கோமுக முகத்தில்** இருந்து வெளியேறும், கங்கையையே, **கோமுக்** என்று, ஸ்ரீமஹான்களால் அழைக்கப்படுகிறது. கோமுக் என்ற இந்த, ஸ்ரீ அம்பாளின் இடமானது, கலிதோஷத்தால், பீடிக்கப்படுவதால், இன்னமும் சிலகாலத்தில், மறைபடும் என ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால் சிலகாலத்தில், இக்கங்கையும் வற்றிப் **வறண்டு** போகும் என உணர வேண்டும்.



வைத்தியம்:— ஹே சர்வேஸ்வரா! மஹா தேவா! இவ்வேழையின் தாவம் சுமார் ஓர் 38 வருஷங்களுக்கு முன்பு, இந்த இமாலயாவில், சஞ்சாரம் செய்ததாகவும், அது சமயம், வெள்ளியங்கிரி! சென்றதாகவும், ஸ்ரீபாண்டுரங்கனே! உடன் இருந்து, அழைத்து வந்ததாகவும், ஓர் கதை பேசப்படுகிறதே! அது பற்றி சில கேள்வி?

(A) அந்த வெள்ளியங்கிரி எங்குள்ளது?

(B) அந்த தாவம் எந்த வழியாக அழைத்து வரப்பட்டது?


(C) அந்த இரண்டுமாத மலை சஞ்சாரமும் எப்படி அனுபவிக்க முடிந்தது?

(D) அக்காட்சிகளின் ரகஸ்யம் என்ன?

இந்த நான்கு கேள்விகளுக்கும், விடையளிக்க வேணுமென்று, திருவடிபணிந்து வேண்டுகிறேன்.


பரமன்:— உன்னை அழைத்து வந்தவன் எவனோ! அவனிடமே இக்கேள்வியை கேள்.

வைத்தியம்: சிரித்துக் கொண்டே பிரபோ! அவன் வேறு! தாங்கள் வேறு?



பரமன் :- (சற்று சினத்துடன்) அவன் வேறு! யாம் வேறுதான்! முன்பு ஒருசமயம், விளக்கம் செய்யும் போது, குருவிடம் கேட்கும் கேள்வியை குருவிடமே கேட்க வேண்டும் என்றும், ஸ்ரீபகவானிடம் கேட்கும் கேள்வியை ஸ்ரீபகவானிடமே கேட்க வேண்டும் என்றும், தர்க்கம் செய்தவனல்லவா நீ! இன்று மட்டும், என்னவாயிற்றாம்? உன்னை கூட்டி வந்தவனிடமே கேள்?

வைத்தியம் :- (சிரித்துக்கொண்டே அவர் பாதத்தை பற்றிக்கொண்டு) தெரிந்தும் தெரியாதது போல் விரட்டுகிறீரே! அன்று சொன்னது ஸத்தியமே! இன்று சொல்வதும் ஸத்தியமே! எப்படியென்றால்? ஸத்குரு வேறுதான்! ஸ்ரீபகவான் வேறுதான். இன்று நீங்கள் இருவரும் ஸ்ரீபகவானோ, குருவும் அல்ல! ஸத்குருவும் அல்ல!



தாயும் மகளும் (41)
வயதில் முன்பின்
இருந்தாலும், இருப்
பில் பெண் தானே?
அதே போல் பரமனும்
பரந்தாமனும் காலத்தில்
முன்பின் இருந்தாலும்
இருப்பில் ஸ்ரீபகவான்
தானே? ஸத்குருநிலையை
இவ்விருவரும் பெறமுடியாது.
ஸத்குரு எல்லாமாய் உள்ள பரம்பொருளாக இருப்
பதால், அவர் எல்லாமாய் இருக்க முடியும்.

<u>பரமன்</u>:— எம்மிடம் விளையாடாதே! இதை உணர். என் (சிவபெருமான்) காலம் என்ன? உன் **கண்ணன்** காலம் என்ன? அது உனக்குத் தெரியுமா?


<u>வைத்தியம்</u>:— (சிரித்துக் கொண்டே) ஓ தெரியுமே!

<u>பரமன்</u>:— என்ன தெரிந்து கொண்டாய்?

<u>வைத்தியம்</u>:— **தாயும்** அவள் **சேயும்** (பெண் குழந்தையும்) **வயதில்/முன்பின்** இருக்கலாம். ஆனால் அவ்விருவரின் **இருப்பில்** அதாவது **இனத்தில்** (பெண்மையில்) பேதம் உண்டா சொல்லுங்கள்? இருவரும் ஒன்று தானே? (இருவரும் பெண் தானே?)

(பரமனும் பரந்தாமனும், மற்றும் அனைவரும் வெகுபலமாக சிரித்து விட்டனர்)

<u>கண்ணன்</u>:— மகாதேவா! இம்பாபராசாமான்யப் பட்டவன் அல்ல. இவன் **ஶ்ரீ**



சிவ பெருமானுக்கு
தோற்றமும் இல்லை (42)
மறைவும் இல்லை.
ஆனால் இருப்பு மட்டும்
உண்டு. கண்ணனுக்கோ
தோற்றம்! இருப்பு, பின்
மறைவும் உண்டு. ஆனாலும்
இவ்விருவரும் கர்த்தா
என்று தொழப்படுகிறார், ஸ்ரீபக
வானையாகும். குருவுக்கும் தோற்றம், இருப்பு,
மறைவும் உண்டு. ஆனால் கர்த்தா இல்லை. நாடகம்.

# பழவினைக்காரன் ஆகும்.

(மிக மிக மிக மிக மிக பழமையானவன்)

இவனை வெல்ல யாராலும் முடியாது. அதன்
காரணம்! இவன் **பணி**வே காரணம் ஆகும்.

வைத்தியம்:- ஸத்குரு! ஸத்குருநாள்! ஸ்ரீபகவன்! ஸ்ரீபகவான்
தான். இவ்விரண்டும்! **இருப்பிலும்!**
**இயக்கத்திலும்** ஒன்றுதான் என்பதே
சத்தியமாகும் ஆனால்?
இவ்விரண்டும் (ஸ்ரீ பகவானும் ஸத்குருவும்)
தம் இருப்பையும் (நாமரூபத்தையும்) அதன்
இயக்கத்தையும் (அவர்கள் தொழிலையும்) விட்ட
நிலையில், அவ்விரண்டும், **ஒன்றே!**
அந்த ஒன்றே! நாம் அனைவரும்! நம் இருப்பும்
(நாமரூபமும்) நம் இயக்கமும் (தொழிலையும்)
வைத்தே, இந்த **மாயாமனம்**! ஆடாத ஆட்ட
மெல்லாம் ஆடுகிறது. இப்படி உணர்வதே
ஆத்ம ஞானம் ஆகும்.




ஸத்குருவுக்கு தாவ (43)
ரம், ஸத்தி
யமும் அசிவ/ சாஸ்வதமும்
அல்ல. ஆகவே தாவமும் இல்
லாத, ஒலி & ஒளியே/
ஸத் குருவாகும். ஆகவே
ஸத்குருவுக்கு, தோற்றம்/
இருப்பு/ மறைவு/ என்ற முக்
காலமும் கடந்தவராகும். ஆகவே ஸ்ரீ பகவான், ஸத்
குருவில் பெற முடியாது. ஸத்குரு எல்லாமாய் இருப்பார்.
தொடரும்.

வைத்தியம் :- இனி இந்த, ஓசையின் கேள்வி
க்கு, பதில் சொல்ல தயங்கமாட்டீர்களோ?
பரமன் :- (கட கட கட கட வென சிரித்துக் கொண்டே)
அனைத்திலும், நீ கெட்டிக்காரனே! இனி உன்
கேள்விக்கு, பதில் சொல்கிறேன். கவனமாக கேள்.

(A) கேள்வி :- அந்த வெள்ளியங்கிரி எங்குள்ளது?

ஸ்ரீ பரமன் :- குழந்தாய், பாபா! நீ எம்மை மண்டியிட்டு தரிசி
த்து எம் கிருபையால் **ஸத்யயாத்திரை**
செய்யும் போதே, **கைலாய** காட்சி வேணுமென்ற, உன்
ஸங்கல்பமும்/ அதில் நம்பிக்கையின் வைராக்கியமும், பரி
பூரணமாக இருந்ததை, யாம் அறிவோம். ஆகவே அன்று நடந்தது,
அதாவது ஹரித்துவார் & ரிஷிகேஷ் / வரையில், நடந்த
அனைத்து தீர்த்தம் & க்ஷேத்ர ஸ்தவம்/ அனைத்தும்
ஸத்யமே. அதன் பின், ரிஷிகேஷில் இருந்து நடந்த
சுமார் **1½** ஒன்றரைமாதம்/ இந்த இமயமலையில் நடந்த
பாதயாத்திரையும்/ மலைகளில் குடிசையில் நீ கண்ட
பக்தர்கள் கூட்டங்களும்/ ஆங்காங்கே, சிவமஹான்களின்
தரிஸனமும்! ஜீப் & கார்/ என உன்னை அழைத்துச்சென்றதும்/
ஆச் **ச்ரமமும்** இன்று பத்ரி & கேதாரம் & வெள்
ளியங்கிரியில், கண்ட **மானஸரோவரும்!**
**கைலாசபதியின் பீடமும்!**



ஆறாவ் நாம ரூப, (ஓம்) ஜக ஜீவ, ஈஸ்வராதிகளில் ஒட பாமலும் இருக்க முடியும். அறிவு சொரூபமாக இயங்கவும், இயங்காமலும், அந்த மாக இருக்க முடியும். ஸத்குருவின் திருமுக வாசி


சொன்னது **இறை குரு பரகருணை,** என ஸ்ரீமஹான்கள் மெய்மாத அறிவுரை முடிந்தது.

அந்தக் காட்சிகளும், **உலகங்களே** தோற்றுவிக்கப்பட்ட **மாயா** காட்சி ஆகும்.

வைத்தியம்:— ஹே தயாநிதி! தயாஸாகரா! கிருபாநிதி! அன்றுவெள்ளியங்கிரியில், நடந்து செல்கையில், எங்கும் ஒரே பனிமயம்! பாதை என்பதே இல்லாத இடம்! சில இடங்களில் பனி மூடிய பாறையின் உள்ளே! ஒலித்த ஓம் என்ற பிரணவ ஒலியுடன் கூடிய, சூட்சும ஸ்ரீமஹான்களின் தரிசனம்! அம்மானஸ ஏரியில் (பனி ஜலத்தில்) இந்த ஏழையை, எந்த வஸ்திரமும் இல்லாமல் ஓர் முறை முக்கி அமிழ்த்தி எடுத்தது! பனியின் சிகரத்தில் ஓர் பெரிய மண்டபம் போல் ஓர் கோளம்! அம்மண்டபத்தில் **சக்தி & சிவன்!** அமரும் ஓர் அழகிய **பீடம்**

இவை கண்டு பல ஆயிரக்கணக்கான, அன்பர்களின் மலைப்பயணம்! குதிரை! டோலி! டாக்டர்! குளிர் தாங்காமல், இறந்தவர்கள்! அவர்களை ஓர் ஓரமாக இழுத்து வைத்து விட்டு, எந்த **சலனம் & சஞ்சலம்பு அழுகை**

இவ்வாறு நடந்து சென்ற ஜனசமூகம்! பனிமயம்! அது சமயம், கையில் உள்ள, ஊன்று கோலால் தரையில் தட்டி அதை உறுதியாக பற்றிய பிடியில், இவ்வேளையும்,




அன்பர்கள் கூட்டமும் ஹரஹரமஹா தேவா! என்றும், சிவசிவசங்கரா! என கூக்குரலிட்டவண்ணம் இருந்தவர்களின் வினை விதி முடிந்தவர்களைமட்டுமே! அம்மனிதப்புயல், கடகட வென, உருட்டிச் சென்றகாட்சி! அந்நிலையிலும், எந்த சலனமும், சலசலப்பும் இல்லாமல், அவரவர் நடைப் பயணத்திலேயே லயித்த காட்சிகள்! இவை அனைத்துமே, உண்மை இல்லையா பிரபோ?

பரமன் :— இல்லை குழந்தாய்! அனைத்துமே என் மாயாவே!

பைத்தியம் :— ஹே தயாநிதே! இந்த ஏழையின் மீது அத்தனை கருணையா?

பரமன் :— அன்று என் உண்மையான, பக்த பழமான, என் திருநாவுக்கு அரசனுக்கு! அப்பருக்கு இக் கைலயங்கிரி! பிரமையாலேயே அவன் இருந்த இடத்திலேயே, கைலாய காட்சிகாட்டினேனே அதே நிலைதான், உன் நிலையிலும்! அன்று நடந்தது. மேலும்



குழந்தாய் பாமா! (4-6)
இன்றைய உலகில்
கைவல்யம் எனச் சென்று
தரிசிப்பவர் அனேகம்
இருக்கலாம். ஆனால் அந்த
கைவல்யம், உனக்கு
தேவையில்லை. ஆகவே
அன்று உனக்காகவே
ஸ்ரீகைலாய
திருக்காட்சியை, காட்டினோம். எம் குழந்தை
அவர் கண்ட கைவல்யமே, நீ கண்ட கைவல்யமாகும்.

பைத்தியம் :- ஹே பிரபோ! அவரோ சமயக்குரவர்! சைவ சமயத்தின் குரு ஓர் பழுத்த பக்திப் பழம். அவர் நிலை எங்கே? எம் நிலை எங்கே?


பரமன் :- அவர் சமயக்குரவர் என்ற, சைவமதத்தின் குருதானே? அவர் சாமான்ய குருதானே? ஆனால் நீயோ! எம்மதமும்! எச் சின்னமும்! எம் பேதமும்! அற்ற தாம் தாமாய் தோன்றிய, ஓர் ஸத்குரு ஆவாய். இனியும் இவ்வாறு பேசினால், நீ இங்கு இருக்கமாட்டாய்! ஓடிவிடுவாய் இனி இவ்வாறு, உன்னை காட்டிக் கொடுத்து, பேசமாட்டோம்.

பைத்தியம் :- ஓ எம் ஐயனே! அப்பனே! ஓர் மனுவாக, விண்ணப்பத்திற்கு தாங்கள், செவி சாய்க்க வேண்டும்?

பரமன் :- சொல் குழந்தாய்! என்ன வேண்டுகோள்?

பைத்தியம் :- அம்மாயா காட்சி இனியும் வேண்டாம். இன்றும்! என்றும்! என்றென்றும்! வேண்டாம். எம் குழந்தைகளுக்கும் வேண்டாம்.

பரமன் :- அவசியம் இராது! ஆனால் இன்று நீ கூட்டி வந்துள்ள, கூட்டம் மாயாவையும்! அந்த காட்சியையும்! விரும்பவில்லை என்பதை, யாம் அறிவோம். ஆனால் இவர்கள் அனைவரும், உன்னை மட்டும் விரும்புகின்றனர். என்பதையும் அறிவோம்.





உன் அன்பர்கள் இந்த மஹா சம்சார காலங்களில் விஷ்ணுவும் விளக்குவதால், நஷ்டம் பட்டாலும், பேரானந்தக் காட்சியில், மயிர்க்கூச்செறியும் உடல் சிரமம் மறைபடும். ஆதலால் அவர்களின் அறியாமையின் ஆகாமிய கர்மா முழுவதும் நசிக்குமாகும். (47)

பரமன்:— இன்று வந்துள்ள அனைத்து அன்பர்களும், அவரவர் மனோ பக்குவத்துக்கு ஏற்றவாறு ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும், ஓசைகளையும் அவசியம் அனுபவிப்பர். அவைகள் அவர்களின் தூய சிரமங்களை, ஏற்றுக் கொண்டு (விண்ணை முடித்துக் கொண்டு) அதன் பலனை இம்மையில் அனுபவிப்பர்.

வைத்தியம்:— (B) கேள்வி:— அந்த தூவம் இங்கு எந்த வழியாக, அழைத்து வரப்பட்டது?

பதில்:— பரமன்:— எம் ஆனந்த பாபா! அன்று நீ, இங்கு வந்த வழியாவது:— ஹரித்துவார் ரிஷிகேஷ்! வழியாக கங்கைக்கரை ஓரமாகவே, கடும் காடு வழியாக, வரும் போது தான், வனவாசிகளாகிய, அனேக பக்தர்கள் உன்னை தரிசித்து, பல உபகார சேவை செய்து, பயன் பெற்றனர். பின் ஜீப் கார் மூலமாக, பிரயாணம் செய்வதைப் போல் காட்டி பத்ரிநாத் வந்து தரிசனம் செய்தோம்.






அங்கிருந்து, கீழே இறங்கவில்லை. பனிமலை
பிரயாணமாகவே, **கேதாரம்** சென்றோம்.
அதன் பின்னரே, பனிமலை யாத்திரையின், கூட்டம்
புறப்பட்டது. அங்கிருந்து **தபோவனம்**
பனிமலையில் **10** மைல்கள் ஆகும். அங்கிருந்து
உள்ளே, தரிஸிக்கச் செய்த, வெளியில் தெரிகின்ற
**கைலாயம் 10** மைல்கள் ஆகும். இதில்
எவரும், செல்ல முடியாத இடம் ஆகும். ஆனால் நீர்
உண்மை என்னவென்றால்?
பனிமலையில், நீ சென்ற இடம் அனைத்தும் **உண்மை**!
ஆங்காங்கு நீ கண்ட காட்சிமட்டும் **மாயா** ஆகும்!
பனி என்றுவே, ஜலமும்! அக்கினியும்! இணைந்து
**காற்றோடு பிணைந்து இருக்கும்**
ஆனதியாகும். அப்படி காற்று பனியுடன் இருக்கும்
போது தன்மையாகவே, காற்றின் **அழுத்தம்**!
குறைந்து வருகிறது. ஆகவே இது யோகிகளுக்கும்!
சித்தர்களுக்கும்! ஏற்ற இடம் ஆகி வருகிறது.
குடும்பிகளுக்கு, ஏற்ற இடம் இல்லை. ஆகவே இங்கு
எந்த ஜீவனும், இருக்கமுடியாது! இருக்கக்கூடாது.
இருக்க இயலாது.



உ

அந்த வெள்ளியங்கிரியின் கீழே இருக்கும், தபோவனத்தில் தான், இன்றும்! அன்றும்! என்றென்றும்! ஸ்ரீ மஹான்கள் தபஸ்விகளாக, வாசம் செய்கிறார்கள். **பூர்வபுண்ணியம்** உடையவர்களே, இத் தபோவனம் வரை வருகின்றனர். அதற்கு மேல், எவரும் செல்லமுடியாது! செல்ல கூடாது! செல்ல இயலாது! பத்ரி & கேதாரம் & வெள்ளியங்கிரி! பிரயாண தூரம் சுமார் **30** மைல்களே! ஆனால் அப்படி செல்ல, இயலாத்தன்மையினால், இருநூறு! முன்னூறு! மைல்கள் என்று **500** மைல்கள் சுற்றி அலைகின்றனர். வெள்ளியங்கிரியை தரிசித்து, திரும்பவும், கேதாரம்! பத்ரி! ரிஷிகேஷ்! ஹரித்துவார்! என வந்த வழியே, திரும்ப சென்றும். இங்கில் இன்றோ மாயா! என்ன வென்றால் ஜீப்பிலும், காரிலும், ரெயில், நடையாணமாகவே, பத்ரி To ரிஷிகேஷ்! **200** மைல்களையும் திரும்பி வரும்போது **மூன்றே** நாளில் கடந்து வந்தோம். அதன் ரகஸ்யம், அன்று **நீ** அறியாய். அதன் ரகஸ்யம்! அன்று **யாம்** அறிவோம். ஆனால் அன்றும்! என்றும் **யாம்** உண்டு. **இன்றும்**! அன்றும்! என்றும் **நீ** இல்லை!

ஆனால், அதுவாக இருக்கிறாய் இலக்ஷியம்!



வைத்தியம்:— கேள்வி:— அந்த கிராண்டமான, மலை சஞ்சாரம், எப்படி அனுபவிக்க முடிந்தது?

பரமன்:— பதில்:— இதில் அதிசயம் என்ன வென்றால், **உன் தூலசிரமம்** உன்னை நெருங்கவில்லை.


காரணம்:— உன் **ஸர்வார்ப்பணபக்தி** ஆகும்.

ஆனால் உன் தூல கர்மாக்கள், முடிந்து அழிந்து கொண்டிருந்தன. அப்படி முடியும் கர்மாக்களை, எம் **மாயா** சிரமமின்றி நடத்திக் கொண்டிருந்தது.

ஆனால் நீயோ தாய் கோழியின், சிறகுக்குள், அடைக்கலம் புகுந்த கோழிக்குஞ்சு போல **குரு** உஷ்ணம் தாக்காமலும்! வெளி **உபாதை** எதுவும் தோன்றாமலும்; வெகு பத்திரமாய், பாதுகாக்கப்பட்டு வந்தாய்.

வைத்தியம்:— கேள்வி:— அக்காட்சியின் ரகஸ்யம் என்ன?

பரமன்:— பதில்:— உன் போன்று ஒருவனும் ஓர் நாம ரூபமுள்ள, ஸ்ரீ பகவானிடம்! சர்வார்ப்பணம் செய்து விட்டால் போதும். அவன் **ஜன்மசாபல்யம்!** ஆகிவிடும். இது உறுதி.



ஜன்ம சாபல்யம் :— ஜன்மா என்பது மனித ஜன்மா.
சாபல்யம் என்பது, **ஆகாமிய** கர்மா தீர்வது

நான்! என்றவ்! எனது! என்பதை விடாமல்! விட முடியாமல் செய்து, பற்பல ஜீவர்களின் பாபங்களை, அறியாமல் செய்து, அதனால் வரும் அவஸ்தையும், கர்மாவும் நீங்கப் பெறுவது

ஜன்ம சாபல்யம் ஆகும். இது சர்வார்த்த மனம்! ஒன்றேயே, அழிந்து நாசமாகும். மற்றும் எதுவும் முடியாது.
இந்த ஜன்ம சாபல்யம், அடைந்தவனுக்கு **மோக்ஷ** இச்சை அவஸ்யம் இருக்கும்.

பெறுமவ், மோக்ஷ இச்சை இல்லை (ஜன்ம சாபல்யம் ஆனவ் ஓர் உண்மை!)

**உன்** போன்று காட்சியும்! நிகழ்ச்சிகளும்! பெற வேண்டும் என்பது! விதி அல்ல. ஆனால் அவஸ்யம்,


**உருக்கம்! ஏக்கம்! இதய துடிப்பு! கண்ணீர் கசிவு**

வேண்டும்.

(இக்கண் கசிவினால், உள்ளம் தூய்மையாகி இறைநிலை பெறுவாய்.)

காட்சிகளில் மனம், மயங்கக் கூடாது. அது நாசமே! நமக்கு அவனாக எதுவும் நடைபெற வில்லை என்று, பூரண நிறைவு வேண்டும்.
**போட்டி பொறாமை** வேண்டாம்.
நாம் அடங்கி இருந்தால், இந்நிலை கிடைக்கும்.





(52)

அது சமயம் எம் பிரபுவிடம், அஹங்காரம், அதிகாரம், ஆதிக்க அபிமானம் மிகுதியாகக் காணப்பட்டது. பணிவு அறவே இல்லை. அடக்கம் வார்த்தை அதிகம். அடங்கும் வார்த்தை வருவதில்லை. ஆகவே எம் பிரபுவிடம் இருந்து எப்போது விடுபடுவோம் என எம் மன மயக்கம் இருந்தது. அது எம் குறையேயன்றி! அவர் குறை இல்லவே இல்லை!

வைத்தியம் :- எம் பிரபுவே! தயாஸாகரா! கருணாநிதே! தயாஸிந்து! கருணைக் கடலே! கடைசியாக இக்கேள்வியை கேட்டு, இந்த **ஸத்ஸங்கத்தை** நிறைவு செய்கிறோம்.

அந்த ஓராண்டு காலம் தாங்களுடன், யாத்திரை செய்யும் போது, சில சில சமயங்களில் தான் **மறைமுகமாக** விளக்க வொண்ணா! சொல்ல வொண்ணா! ஆனந்தம் உண்டாகும். மற்றும் பெரும்பாலான காலங்களில் தாங்கள் மீதும்! தாங்கள் வார்த்தைகள் மீதும்! தாங்கள் செய்கையின் மீதும்! ஓர் அருவருப்பும்! கடுந்துவேஷமும்! இவரை விட்டு, எப்போது விலகுவோம் என்ற **வெறுப்பு உணர்ச்சியும்**! உண்டாக காரணம் என்ன? தாங்களின் **மாயையா?** அல்லது இந்த ஏழையின் **மனத்தடுமாற்றமா?** இக்கேள்விக்கு, மட்டும் விடையளியுங்கள் பிரபோ! இது எம் குழந்தைகள்! அனைவர்க்கும், ஓர் பாடமாக அமையும். அனைவரிடமும் **இக்குறை** இருப்பதாக உணர்கிறோம். தயை செய்து பணிவும், எளிமையாகவும், புரியும் நிலையிலும், சுருக்கமாகவும்! இருக்க வேணுமென்று பிரார்த்திக்கிறோம்?




(53)

இ

தடுமாற்றம் என்பது, மனதில் நிகழ்ச்சியும்! காட்சியும்! ஓர் எதிர்பாராப்பு ஏற்படுமாகில், அதில் ஓர் மாற்றம் உண்டானால் அதில் ஏமாந்து போன மனமானது சந்தேகத்தில் தோன்றும், தவிப்பினால், தடுமாறுவது இயல்பே. இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்று தோன்றும் நினைவுகளுக்கு, ஆளாகாமல் இருந்தால் தடுமாற்றம் உண்டாகாது.

பரமன்:- ஹே எளிமைக்கும் எளிமையான பாமரனே! கவனமாக கேள்:- நான்! என்னால்! எனது! என்ற அஹங்கார, அதிகார, அபிமானம்! **வாக்கு** நிலையில் அழிந்திருந்தாலும், அது பிரயோஜனமில்லை. அப்படி அழிந்த நிலையில், உள்ளத்தின் **உள்ளே** அதன் **வேர்த்துகள்**! இருந்தாலும், அது திரும்பவும் துளிர்க்க ஏதுவாகும். அத்துகள்கள் இருக்கிறது என்பதற்கு, உதாரணம் அடையாளம்:- **நாமரூப** ஜக ஜீவ, தோற்றங்களின், அசைவிலும்! இயக்கத்திலும்! வரும் ஓசைகளிலும் (வார்த்தைகளிலும்) **குற்றம்குறை! விருப்பு வெறுப்பு! பேத உணர்வு!** இவை ஒன்றும்! தோற்றம் வரை! நான்! என்றல்! எனது! இம்மூன்றும் அழியவில்லை என பிரமாணமாக, சொல்வோம். இம்மூன்றையும், அழிப்பது எல்லாம் அவன் செயலே! எல்லாம் அவன் பொருளே! அவனன்றி அணுவும் அசையாது! என்ற நிலை ஸத்தியமானால்!

57



இருப்பது ஒன்றே! ஆகவே நடப்பது நலமே தான்!
என்ற நிலையில், எந்த சந்தேக கலக்க பயமின்றி!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என ஆரண **நிறைவுடன்!** பொறுமையின்
சிகரமாக! பொறுமையின் கவசமாக! பொறுமையே
ஆடையணியாக! கடலிலும், மிகுந்த அலைவற்ற அமை
தியின் நிலையில் **பொறுமை!** காப்பதே,
நான், என்றவ், எனதென்ற நிலையாலும் இது அகங்காரத்தில்
உள்ளடங்கி இல்லாததே, எம் மீது வெறுப்பு உண்டாக,
காரணம் ஆகும். அது பயிற்சியின் முற்றுப் பெறுகதே,
காரணம் ஆகும். உன் நிலையே, ஸ்ரீ ஸத்குரு சமாதிக்கும் பின்
1992ல் ஸ்ரீமத் தீக்ஷையை கிடைத்து, அதில் உள் ஆழ்ந்து
நீ கரைந்து மறைந்த பின்னரே சாத்தியமாயிற்று.

இதன் உட் பொருள்.

குற்றம் குறை! விருப்பு வெறுப்பு! பேத உணர்வு! உள்ளவரை
நான்! என்னவ்! எனது! முழுமையாக அழியவில்லை என,
இந்த ஸத்ஸங்கத்தை, இத்துடன் நிறைவு செய்கிறேம்,
என ஸ்ரீ ராமன், முடித்துக் கொண்டார். குரு பாபா.
எல்லாம் ஒன்றே!
அதுயாவும்! அத்வைதம்! ~~இவ்வைத்திலும்~~




Abode of Love

You Are Everything!